செ.வெ.எண்: 21 நாள்: 11.07.2020

# அரியலூர் மாவட்டம்

# அரியலூர் அரசு மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைக்காக பயன்படுத்தப்படவுள்ள 310 படுக்கைகளுக்கு குழாய் மூலம் ஆக்ஸிஜன் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சுகாதாரத்துறையின் சார்பில் கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் விதமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூர் மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு அமலுப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கொரோனா வைரஸ் தடுப்பு நடைவடிக்கைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரியலூர் நகராட்சி, ஜெயங்கொண்டம் நகராட்சி ஆகிய நகராட்சி பகுதிகளில் அனைத்து வீடுகள் மற்றும் கடைகள், பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

அரியலூர் அரசு மருத்துவமனையில் கொரோனா சிகிச்சைக்காக பயன்படுத்தப்படவுள்ள 310 படுக்கைகளுக்கு குழாய் மூலம் ஆக்ஸிஜன் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை அரியலூர் அரசு மருத்துவமனையில் 240 படுக்கைகளுக்கும், ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் 12 படுக்கைகளுக்கும் ஆக்ஸிஜன் இணைப்பு குழாய் மூலம் வழங்கப்பட்டுள்ளது. செந்துறை அரசு மருத்துவமனையில் 30 படுக்கைகளுக்கும், உடையார்பாளையம் அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகளுக்கும் குழாய் மூலம் ஆக்ஸிஜன் இணைப்பு வழங்கும் பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. அவசர உதவிக்காக குடிசை மாற்று வாரிய குடியிருப்புக் கட்டிடத்தில் 100 ஆக்ஸிஜன் உருளைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன் அரியலூர் அரசு மருத்துவமனையில் 45 ஆக்ஸிஜன் உருளைகளை கொண்டு படுக்கைகளுக்கு அருகில் வைத்து நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் வழங்கப்பட்டு வந்தது. தற்போது, கொரோனா வைரஸ் பரவலை தடுக்கவும், கொரோனா வைரஸ் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கும்போது தேவையான ஆக்ஸிஜன்கள் விரைந்து வழங்குவதற்கு இப்பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. மேலும், நோய் தொற்று ஏற்படும் பட்சத்தில் நோயாளிகளை தனிமைப்படுத்தி மருத்துவ சிகிச்சை வழங்க அரியலூர் மாவட்டத்திலுள்ள திருமண மண்டபங்கள், கல்லூரி விடுதிகள், கல்லூரிகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் படுக்கை வசதிகள் ஏற்பாடு செய்து, நோய் தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்குவதற்கும் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், நோய் தொற்று ஏற்படும் பகுதிகளை தடைசெய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டு, கிருமி நாசினி மூலம் சுத்தப்படுத்தும் பணிகளும், மருத்துவக்குழுவினரால் கண்காணிப்பு பணிகளும் தீவிரமாக நடத்தப்பட்டு வருகிறது. அரியலூர் அரசு மருத்துவமனையில் 03.05.2020 முதல் கொரோனா வைரஸ் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆரம்பக்கட்டத்தில் குறைவான எண்ணிக்கை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன. தற்போது அதிகளவில் இந்நோய் தொற்று பரவி வருவதால், தினமும் 600 முதல் 700 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பரிசோதனை எண்ணிக்கை அதிகரிப்பதற்கு விழுப்புரம் அரசு மருத்துவமனையிலிருந்து நுண்ணுயிரியல் துறை உதவி பேராசிரியர் அவர்கள் அரியலூர் அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரிசோதனை நிலையத்திற்கு மாற்றுப்பணியமர்த்தப்பட்டுள்ளார். மேலும், கூடுதல் ஆய்வக நிபுணர்களும் நியமிக்கப்படவுள்ளனர். நோய் தடுப்பு நடவடிக்கையில் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கி, முககவசம் அணியாமல் வெளியே வருவதை கண்டிப்பாக தவிர்க்குமாறும், சமூக விலகலை கடைபிடிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ஜெயினுலாபதீன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி தலைவர் முத்துகிருஷ்ணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, மருத்துவர் ரமேஷ், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிச்சந்திரன், மாவட்ட தகவலியல் அலுவலர் ஜான்பிரிட்டோ உட்பட மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**